(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 12 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2008, யூலை 24, வியாழக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0032/ '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டத்திலுள்ள தெஹிவளை தேர்தல் தொகுதியில் 2004 ஆம் ஆண்டில் இருந்து 2007 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஒவ்வொரு வருடமும் யூன் 30ஆம் தேதியன்றுள்ளவாறு சமுர்த்தி பெறுநர்களின் எண்ணிக்கையையும் ,

(ii) பெற்றுக்கொண்ட உதவித் தொகையின் பிரகாரம் மேற்படி குடும்பங்களின் வகைப் பிரிவுகளையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2004, 2005, 2006, மற்றும் 2007 ஆகிய ஆண்டுகளுக்கான பணவீக்கப் பெறுமானத்தையும்,

(ii) பணவீக்கத்தைக் கருத்தில் எடுக்காது 2004 ஆம் ஆண்டை ஓர் அடிப்படை ஆண்டாகக் கொண்டு, பின் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் 2007ஆம் ஆண்டுவரை அவர்கள் பெற்ற தொகையின் உண்மைப் பெறுமதியையும்,

(iii) சமுர்த்தி பெறுநர்களது கொள்வனவுச் சக்தி குறைந்துள்ளது என்பதை இது உணர்த்துகிறதா என்பதையும்,

(iv) இதன் விளைவாக இப்பயன் பெறுநர்களுக்கு மத்தியில் வறுமை அதிகரித் துள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0033/ '08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்பஹா மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டில் இருந்து 2007 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஒவ்வொரு வருடமும் யூன் 30 ஆம் தேதியன்று ள்ளவாறு சமுர்த்தி வாழ்வாதார உதவியைப் பெற்றுக்கொண்ட குடும்பங் களின் எண்ணிக்கையையும் ,

(ii) பெற்றுக்கொண்ட உதவித் தொகையின் பிரகாரம் மேற்படி குடும்பங்களின் வகைப் பிரிவுகளையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2004, 2005, 2006, மற்றும் 2007 ஆகிய ஆண்டுகளுக்கான பணவீக்கப் பெறுமானத்தையும்,

(ii) பணவீக்கத்தைக் கருத்தில் எடுக்காது 2004 ஆம் ஆண்டை ஓர் அடிப்படை ஆண்டாகக் கொண்டு, பின் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் 2007ஆம் ஆண்டுவரை அவர்கள் பெற்ற தொகையின் உண்மைப் பெறுமதியையும்,

(iii) பொருளாதாரத்தைத் தவறாகக் கையாண்டதன் விளைவாக உயர் பணவீக்கம் ஏற்பட்டு அதன் காரணமாக சமுர்த்தி பெறுநர்களின் கொள்வனவு செய்யும் ஆற்றலில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0034/ '08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டில் இருந்து 2007 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் ஒவ்வொரு வருடமும் யூன் 30 ஆம் தேதியன்றுள்ளவாறு சமுர்த்தி வாழ்வாதார உதவியைப் பெற்றுக்கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கையையும் ,

(ii) பெற்றுக்கொண்ட உதவித் தொகையின் பிரகாரம் மேற்படி குடும்பங்களின் வகைப் பிரிவுகளையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2004, 2005, 2006, மற்றும் 2007 ஆகிய ஆண்டுகளுக்கான பணவீக்கப் பெறுமானத்தையும்,

(ii) பணவீக்கத்தைக் கருத்தில் எடுக்காது 2004 ஆம் ஆண்டை ஓர் அடிப்படை ஆண்டாகக் கொண்டு, பின் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் 2007 ஆம் ஆண்டுவரை அவர்கள் பெற்ற தொகையின் உண்மைப் பெறுமதியையும்,

(iii) பொருளாதாரத்தைத் தவறாகக் கையாண்டதன் விளைவாக உயர் பணவீக்கம் ஏற்பட்டு அதன் காரணமாக சமுர்த்தி பெறுநர்களின் கொள்வனவு செய்யும் ஆற்றலில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0345/ '08

4.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2004 ஆம் ஆண்டில் புதிய அரசாங்கம் பதவியேற்றதன் பின் பிரதி அமைச்சர் இற்றைவரை வெளிநாட்டு விஜயங்கள் மேற்கொண்டுள்ள நாடுகள் யாவை என்பதையும்,

(ii) அவற்றில் பிரதி அமைச்சரினது உத்தியோகபூர்வ மற்றும் தனிப்பட்ட விஜயங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) அவ் விஜயங்களில் பிரதி அமைச்சருடன் கலந்துக்கொண்ட உத்தியோகத்தர் களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி விஜயங்களின் பிரதி அமைச்சரின் தனிப்பட்ட பணியாட்டொகுதி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருப்பின் அவர்களது பெயர்கள் மற்றும் பதவிகள் யாவையென்பதையும்,

(iii) பிரதி அமைச்சர் உட்பட ஏனைய உத்தியோகத்தர்கள் பயணம் செய்த விமானக் கம்பெனி மற்றும் விமானவகுப்பு யாவையென்பதையும்

அவர் தனித்தனியாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) மேற்படி வெளிநாட்டு விஜயங்களினால் இந்த நாட்டுக்கு கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு உதவிகள், வெளிநாட்டுக் கடன்கள், கருத்திட்டங்கள் அல்லது வேறு நன்மைகள் யாவையென்பதை அவர் அந்தந்த விஜயம் ரீதியாக தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0346/ '08

5.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— தொழில் முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சம்பந்தப்பட்ட அமைச்சர் பதவி ஏற்ற பின்னர் அவரும், தொழில் முயற்சி அபிவிருத்தி (அமைச்சரவையல்லாத) அமைச்சரும் முதலீட்டு ஊக்குவிப்பு (அமைச்சரவையல்லாத) அமைச்சர்களும் இற்றை வரை வெளிநாட்டு விஜயங்கள் மேற்கொண்டுள்ள நாடுகள் யாவை என்பதையும்,

(ii) அவற்றில் உத்தியோகபூர்வ மற்றும் தனிப்பட்ட விஜயங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) அவ் விஜயங்களில் அமைச்சர்களுடன் கலந்துக்கொண்ட உத்தியோகத் தர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி விஜயங்களில் அமைச்சர்களின் தனிப்பட்ட பணியாட்டொகுதி உத்தி யோகத்தர்கள் கலந்து கொண்டிருப்பின் அவர்களது பெயர்கள் மற்றும் பதவிகள் யாவையென்பதையும்,

(iii) அமைச்சர்கள் உட்பட ஏனைய உத்தியோகத்தர்கள் பயணம் செய்த விமானக் கம்பெனி மற்றும் விமானவகுப்பு யாவையென்பதையும்,

(iv) மேற்படி விஜயங்களுக்காக அமைச்சர்கள் உட்பட உத்தியோகத்தர்களுக்காக அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் தனித்தனியாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) மேற்படி வெளிநாட்டு விஜயங்களினால் இந்த நாட்டுக்கு கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு உதவிகள், வெளிநாட்டுக் கடன்கள், கருத்திட்டங்கள் அல்லது வேறு நன்மைகள் யாவையென்பதை அவர்களின் அந்தந்த விஜயம் ரீதியாக தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0347/ '08

6.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2004 ஆம் ஆண்டு புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் பிரதி அமைச்சர் இற்றைவரை விஜயம் செய்த வெளிநாடுகள் யாவை யென்பதையும்,

(ii) பிரதி அமைச்சர் மேற்கொண்டுள்ள உத்தியோகபூர்வ மற்றும் தனிப்பட்ட வெளிநாட்டு விஜயங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி விஜயங்களின் போது அவருடன் கலந்துகொண்ட உத்தி யோகத்தர்களின் பெயர் மற்றும் பதவி ஆகிய விபரங்களையும்,

(ii) பிரதி அமைச்சரின் தனிப்பட்ட பணியாட்டொகுதி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டார்களாயின் அவர்களின் பெயர் மற்றும் பதவி ஆகிய விபரங்களையும்,

(iii) அவர் உள்ளிட்ட ஏனைய உத்தியோகத்தர்கள் பயணம் செய்த விமானக் கம்பனி மற்றும் வகுப்பு யாதென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) மேற்படி விஜயங்களினால் இந்நாட்டிற்கு கிடைத்த வெளிநாட்டு உதவி, வெளி நாட்டுக் கடன், கருத்திட்டம் அல்லது வேறு அனுகூலங்கள் யாவையென்பதை ஒவ்வொரு விஜயத்திற்கும் உரியவாறு வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0399/ '08

7.

கௌரவ அசல ஜாகொடகே,— பெற்றோலியம், பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007 ஆம் ஆண்டில் மேற்படி அமைச்சரின் அமைச்சிற்கு அல்லது அதன் கீழுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் அல்லது வேறு நிறுவனங்களுக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட் டுள்ளவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(ii) ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(iii) இவர்களில், சேவையில் நிரந்தரமாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் பட்டதாரிகளின் எண்ணிக்கை ஆகியவற்றை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0400/ '08

8.

கௌரவ அசல ஜாகொடகே,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007 ஆம் ஆண்டில் மேற்படி அமைச்சரின் அமைச்சிற்கு அல்லது அதன் கீழுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் அல்லது வேறு நிறுவனங்களுக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(ii) ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(iii) இவர்களில், சேவையில் நிரந்தரமாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் பட்டதாரிகளின் எண்ணிக்கை ஆகியவற்றை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0401/ '08

9.

கௌரவ அசல ஜாகொடகே,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007 ஆம் ஆண்டில் மேற்படி அமைச்சரின் அமைச்சிற்கு அல்லது அதன் கீழுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் அல்லது வேறு நிறுவனங்களுக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(ii) ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(iii) இவர்களில், சேவையில் நிரந்தரமாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் பட்டதாரிகளின் எண்ணிக்கை ஆகியவற்றை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0504/ '08

10.

கௌரவ (திருமதி) சுஜாதா அலஹக்கோன்,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தளை, யட்டவத்த வரையறுக்கப்பட்ட அஸ்கிரிய பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்பதையும்,

(ii) அந்த கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(iii) அந்த சங்கத்தின் சொத்துக்கள் எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்கூறிய சங்கம் எப்போது மாத்தளை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) மேற்கூறிய ஒருங்கிணைப்புத் திட்டம் 2007.11.25 ஆந் திகதி முடிவுறுத்தப் பட்டதை அவர் அறிவாரா?

(ஈ) தற்போது இந்த கூட்டுறவுச் சங்கம் நிறைவேற்றுச்சபை அல்லது பணிப்பாளர் சபையொன்று இல்லாமல் நெருக்கடி நிலைமையை எதிர்நோக்கியிருப்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(உ) அவ்வாறெனின், நிருவாகச் சபையொன்றை நியமித்து சங்கத்தை மீண்டும் செயலாற்றும் நிலைக்கு கொண்டுவர அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

0508/ '08

11.

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— வாழ்க்கைத்தொழில், தொழிற்பயிற்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மேசன் வேலை, தச்சுவேலை, கடைசல் வேலை ஆகியவற்றுக்கு இலங்கை யில் வெற்றிடம் நிலவுகின்றதா,

(ii) வெளிநாடுகளிலிருந்து அப்பதவிகளுக்காக கோரிக்கை விடுவிக்கப் பட்டுள்ளதா,

(iii) ஆமெனில், அந்நாடுகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) அத்தொழில்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனங்கள் யாவை

(ii) பயிற்சியின் பின்னர் ஒழுங்கான செயல்முறைப் பயிற்சியளிக்க நிறுவனங்கள் இருக்கின்றனவா,

(iii) பயிற்சியின் பின்னர் வெளிநாட்டுத் தொழில் வழங்கப்படுகின்றதா

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) செயல்முறைப் பயிற்சியின்மையால் மேற்குறிப்பிட்ட பதவிகளுக்குப் புதிய வர்களை ஆட்சேர்ப்புச் செய்ய தனியார்துறை தயக்கம் காட்டுகின்றது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0509/ '08

12.

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரு மானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொழிலுக்காக 2006 - 2007 ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கு வந்துள்ள வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவர்கள் எந்த நாடுகளிலிருந்து வந்துள்ளார்கள் என்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) அவர்கள் வந்திருப்பது அரசாங்கத்தின் அல்லது தனியார்துறை, தோட்டங்களின், தொழிற்சாலைகள் நிர்மாணப் பணிகள், கட்டட துறைகளின் தொழில்களுக் காகவா என்பதை தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) (i) இவர்களுக்கு வீசா அனுமதி எவ்வாறு வழங்கப்பட்டதென்பதையும்,

(ii) இவ்வாறு இவர்களை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது ஊழியர் பற்றாக்குறையை தவிர்த்துக் கொள்வதற்காகவா என்பதையும்,

(iii) 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் மேற்படி ஊழியர்களால் தமது தாய் நாடுகளுக்கு அன்னிய செலாவணியாக பணத்தொகை எவ்வளவு அனுப்பி வைக்கப்பட்டது என்பதையும்,

(iv) இதன் போது செலாவணி கட்டுப்பாடு இடம் பெற்றுள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0510/ '08

13.

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கட்டுகம்பொல தேர்தல் தொகுதியிலுள்ள யக்வில கமநல சேவை நிலையத்தின் போவத்த பெரகும்பா விவசாயிகள் அமைப்பின் உத்தியோகத்தர் தெரிவு, 2007/10/11 ஆம் திகதி விவசாய உறுப்பினர்கள் 40 க்கு அண்மிய தொகையினர் கூடியிருந்தும் நடைபெறாமைக்கான காரணம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அதன் பின்பு பன்னல பிரதேச சபை உறுப்பினரொருவரின் தலைமையில்10-15க்கு இடைப்பட்ட உறுப்பினர்களின் பங்கேற்புடன் உத்தியோகத்தர் தெரிவு நடை பெற்றதென்பதை அவர் அறிவாரா?

(இ) இவ்வுத்தியோகத்தர் தெரிவில் விவசாய அமைப்புக்குச் சொந்தமான ரூபா. 35,000/- (முப்பத்தையாயிரம்) க்கு மேற்பட்ட ஒரு தொகையை மோசடி செய்த ஒருவர் செயலாளரராக நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக ஒரு விசாரணை நடாத்தப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) உத்தியோகத்தர் தெரிவில் கலந்து கொள்ளாத ஒருவரைப் பொருளாளராக நியமிப்பது சட்ட விரோதமானதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(உ) மேற்குறிப்பிட்ட விடயங்களைக் கவனத்திற்கொண்டு இவ்வுத்தியோகத்தர் தெரிவை இரத்து செய்துவிட்டு மீண்டுமொரு உத்தியோகத்தர் தெரிவை நடாத்த அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

0520/ '08

14.

கௌரவ அனுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தனியார்மயமாக்கற் பணிகள் எந்த நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அதன் கொள்வனவாளரைத் தெரிவு செய்த போது கடைப்பிடிக்கப்பட்ட முறைமை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் என்ன விலைக்கு ஒப்படைக்கப் பட்டது,

(ii) இதன் மூலம் அரசாங்கத்துக்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு,

(iii) மேற்படி ஒப்படைப்பின் போது முழுத்தொகையும் ஒரே தடவையில் செலுத் தப்பட்டதா,

(iv) ஆமெனில், அப்பணத்தொகை எவ்வளவு,

(v) இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தனியார் துறைக்கு ஒப்படைக்கப் பட்டமை தொடர்பிலான கொடுக்கல் வாங்கலில் இற்றைவரை செலுத்தப் படாதுள்ள நிலுவைத் தொகைகள் உள்ளனவா,

(vi) ஆமெனில், அத்தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0521/ '08

15.

கௌரவ அநுர திசாநாயக்க,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச் சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொரகஹகந்த நீர்த் தேக்கத்தை நிர்மாணிக்கும் கருத்திட்டத்தின் பொருட்டு மதிப்பிடப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு,

(ii) 2007 ஆம் ஆண்டுக்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது,

(iii) மேற்படி, கருத்திட்டத்தின் பொருட்டு வெளிநாட்டுக் கடன்கள் அல்லது மானியங்கள் வழங்கப்படுகின்றதா,

(iv) மேற்படி, கருத்திட்டம் எத்தனை ஆண்டுகளில் பூர்த்திசெய்யப்பட உத்தேசிக் கப்பட்டுள்ளது,

(v) ஒவ்வொரு ஆண்டுக்காகவும் ஒதுக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற பணத் தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி, கருத்திட்டத்தின் காரணமாக இடம்பெயர நேரிடுகின்ற குடும்பங்க ளின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) அவர்களுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள காணிகள் அமைந்துள்ள பிர தேசங்கள் யாவை மற்றும் ஒரு குடும்பத்துக்கு வழங்கப்படும் காணியின் அளவு எவ்வளவு,

(iii) காணிகளுக்கு மேலதிகமாக இடம்பெயர்ந்தோருக்கு வழங்கப்படுகின்ற ஏனைய வசதிகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி, கருத்திட்டத்தின் பொருட்டு சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை யொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா,

(ii) ஆமெனில், அது எப்போது,

(iii) அதன் பிரகாரம் விதப்புரைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) (i) மேற்படி, கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான விழாவுக்காகச் செலவிடப் பட்ட மொத்தத் தொகை எவ்வளவு,

(ii) இதில் விளம்பரப் பணிகளின் பொருட்டு பொறுப்பாயிருந்த கம்பனி யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) தொலைக்காட்சி அறிவித்தல்கள், சுவரொட்டிகள் , பத்திரிகை அறிவித்தல்கள், விளம்பரப் பலகைகள் மற்றும் ஏனைய விளம்பரப் பணிகளின் பொருட்டு குறித்த கம்பனிக்குச் செலுத்தப்பட்ட தொகை தனித்தனியாக எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2008.06.05 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் 2008.07.25ஆம் திகதி சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 2.30 மணிக்கு 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் (5) ஆம் பந்தி தொழிற்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறிவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2008 சனவரி மாதம் 09 ஆம் திகதிய 1531/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.03.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக் கப்படுமாக.

*2.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியின் கீழ் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2008, சனவரி மாதம் 10 ஆம் திகதிய 1531/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான “2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை(தேயிலைத் தொழிற்சாலைகளின் நிர்மாணமும் தொழிற்பாடும்) குறைந்தபட்ச நியமங்கள் ஒழுங்குவிதிகள்” அங்கீகரிக்கப்படுமாக.

*3.

சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சர்,— விலங்கின, தாவர பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) விலங்கின, தாவர பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் (அ) ஆம் பந்தியினால் உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008 ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதிய 1547/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*4.

கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 142, நிகழ்ச்சித்திட்டம் 2,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் பதினெட்டு மில்லியன் (ரூபா 18,000,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| | | ரூபா |
| தலைப்பு 142 — | கலாசார அலுவல்கள்,<br>தேசிய மரபுரிமைகள் அமைச்சு | |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — அபிவிருத்தி நடவடிக்கைகள் | |
| கருத்திட்டம் 3 | — சமூக கலாசாரம் இணைந்து செயற்படல் | |
| | மீண்டுவரும் செலவினம் | 18,000,000 |
| | மொத்தம் | 18,000,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2008, யூலை மாதம் 08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 3 வரையுள்ள மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 3,198,180,332.

*5.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (சிறப்பேற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*6.

பாடசாலை ஆசிரியர் ஓய்வூதிய(திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*7.

கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*8.

சீன வம்சாவழியினரான ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்கல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்.— இரண்டாம் மதிப்பீடு

*9.

குடியியல் வான்செலவு சட்டமூலம். — இரண்டாம் மதிப்பீடு.

*10.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*11.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*12.

இலங்கை கடன் தகவல் பணியக (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*13.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*14.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*15.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*16.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*17.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*18.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*19.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப் படுமாக.

*20.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— "(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*21.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007 ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*22.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— நீதிச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்க ளுக்கும் செலுத்தப்படும் மாதாந்தப் படி, அவர்களின் மாதாந்த சம்பளத்தின் 1/3 க்குச் சமமான ஒரு படியாக இருக்க வேண்டுமெனவும், அது 2007 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் படிகள் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளு மன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளினால் தீர்மானிக்கப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் படியானது பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல. 2),— 2002.01.28 ஆம் திகதி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள், அரசியலமைப்பின் பதினேழாவது சீர்திருத்தத்தின் 27 (2) ஆம் பிரிவின் கீழ் 2002.01.29 ஆந் திகதியிலிருந்து குறித்த பதவிக்கு மீள நியமிக்கப்பட்டார். அதனையடுத்து, அரசாங்க சேவையில் மேற்கொள்ளப்பட்ட சம்பளத் திருத்தங்களின் வண்ணம், தேர்தல் ஆணையாளரின் சம்பளம் 2006.11.23 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டது, எனினும், செயலாளர் பிரமாணக் குறிப்பின் கீழ் இந்தப் பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்வது தொடர்பாக குறித்த சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப் படவில்லை யாதலால், தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள் மீள சேவைக்கு அமர்த்தப்பட்ட 2002.01.29 ஆம் திகதியிலிருந்து பதவி வகிக்கும் வரையான காலத்திற்குரிய சம்பள ஏற்ற பெறுமானங்களையும் சம்பளத்துடன் சேர்த்து வழங்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் ஊதியமும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்த ஊதியம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் , அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய ஊதியமும், படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட ஊதியமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஊதியமும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— அரசியலமைப்பின் 155அ(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் கொடுப்பனவுகளும் படிகளும் 2006. 01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவில் (எரிபொருள் படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தக் கொடுப்பனவு 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிளாசருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய

கொடுப்பனவுகளும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத் தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுகளும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக் கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*26.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1994 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பந்தியின் பிரகாரம் அக் குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006. 01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டு மென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | | |
|---|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 66,000.00 | மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 | மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 80,400.00 | |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | | |
|---|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 | மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 | மாதாந்தம் |
| மொத்தம் | | ரூ. 77,000.00 | |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளமும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006. 01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*28.

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சர்,— இலங்கை அரச பொறி யியல் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை - 2004,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின 14(3) ஆம் பிரிவின் கீழ், 2006.07.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2004 ஆம் ஆண்டிற்கான இலங்கை அரச பொறியியற் கூட்டுத்தாபனத்தின் ஆண்ட றிக்கை, ஐந்தொகை, இறுதி அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வீடமைப்பு, நிர்மாணத்துறை பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டது.)

*29.

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சர்,— நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் ஆண்டறிக்கை - 2005,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவின் கீழ், 2006.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2005 ஆம் ஆண்டிற்கான நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் ஆண்டறிக்கை, இறுதி அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டது.)

30.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

மகாவலி கலாசார மன்ற நம்பிக்கைப்பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33\.

றங்கா கலை நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34\.

கொலன்னாவ பௌத்த இளைஞர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொளண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.